உ

கடவுள் துணை

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.


| | | |
|---|---|---|
| தொகுதி ௪. | பரீதாபி௵ மாசி௴ | பகுதி ௧௧ |


பொருளடக்கம்.


| | |
|---|---|
| சிவத்தியானம்—பத்திராதிபர் | ௱௩௩ |
| ஆடு கோழிகளின் அடைக்கல விண்ணப்பம்— | ௱௪௧ |
| மாரியம்மையின் உத்தரவு— | ௱௪௫ |
| ஐயவினாத்தொடர் விடை—அ. முத்தையமுதலியார் | ௱௪௯ |
| திருக்குறட்பாயிர ஆராய்ச்சி—மு. இராகவையங்கார் | ௱௫௰ |
| சைவசித்தாந்த சங்கம்—க. சூரியநாராயணபிள்ளை | ௱௫௬ |
| பிரசங்கங்கள்—தமிழ்ப்பிரமணி | ௱௫௮ |
| சமாசாரக்கொத்து—பத்திராதிபர். | |



மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்.

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.

மாணாக்கர்களுக்கு௵ சந்தா ரூ 1. தபாற்கூலி வேறு. தனிப்பிரதி, அணா.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

# ஆசாரியர் விஷய அறிவிப்பில்

## ஒரு வியப்பு.

---

சென்ற தைமீ பாநுவில் கண்டனூர் நா. பெ. நா மு. முத்த ராமஞ்செட்டியாரவர்கள் ஆசாரிய விஷய அறிவிப்பு என்று தலைக்குறி கொடுத்து எழுதியிருக்கிற ஒரு குறிப்பில் நமக்கு ஒரு சிறு வியப்புண்டாகின்றது.

அதாவது:—ஆசாரிய இலக்கணத்தைப்பற்றி எத்தனையோபல தொன்னூல்களிருக்க அவைகளைப் பார்த்துத் தெளியச் சொல்லாமல் தாம் எழுதிய நூலைப்பார்த்துத் தெரியும்படி. தாமே கூறியிருத்தலாகும்.

தொன்னூல்களிலிருந்து தாம்கண்ட உண்மையைத் தம் புத்தகத்தில் அவர்கள் நன்கு விளக்கியிருக்கலாமென்பதை நாம் ஆக்ஷேபிக்கவில்லையெனினும், அம்முக்கியவிஷயத்தைப்பற்றிச்சுருக்கமாக விளக்கிப் பாநுவில் எழுதிவிடாமல் எம்போல்வார்க்கு எட்டாதபடி மேல மடத்திலிருக்கும் அப்புத்தகத்தைப் பார்த்துத் தெளியும்படி அவர்கள் கூறியது நமக்கு மிகவும் வியப்பாகின்றது.

ஊரதேசவாசி.

---

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரிதாபி௵ மாசி௴ { பகுதி ௧௧.

## சிவத்தியானம்.

உலகத்திற்றோன்றிய உயிர்களெல்லாம் இன்பத்தையே விரும்பும். அதிலும், சின்னாளிலொழிவதாகிய சிற்றின்ப போகாதிகளை யொழித்து என்றும் அழியாத பேரின்பத்தையே விரும்புவது அறிவறிந்த மக்கள் கடனாகும். ஆகவே காலவரையறைக்குட்பட்டொழிவதாகிய சிற்றின்பம் யாது? காலவரையறைகடந்து என்றும் நிலைத்துள்ள பேரின்பம் யாது? என விசாரிக்கப்புகின்; பூவுலகத்து அரசபதவியும், பிரமாதி தேவபதவிகளும் அவ்வவற்றிற்குரிய காலங் கழிந்தவுடன் ஒழிந்து விடுதலால் அழிதற்றன்மையவான சிற்றின்பங்களேயாகும். இங்ஙனம் காலத்தின் அளவுக்குட்படாததும், என்றும் மாறாததும் ஆகிய மோக்ஷசாம்ப்ராச்யமான நிரதிசயானந்த மொன்றே பேரின்பமெனப்பெறும். இத்தகைய பேரின்பநிலையே தத்துவநூலுணர்ந்த வித்தகர்களாகிய மெய்ஞ்ஞானிகள் யாவராலும் விரும்பப்படும் பெரும்பேறும். பெறுதற்கரிய பெரும்பேறாகிய இதனை அடைதற்குச் செய்யும் உபாயமே மேற்குறித்த சிவத்தியான மென்றுணர்க. சிவத்தியானம் என்றால் சிவபிரானைத் தியானித்தல் என்று பொருள் தரும்.

மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களின் மூலமாகவே எல்லாச் செயல்களும் நிகழ்வனவாம். இம் மூன்றனுள்ளும் காயத்தின் வழிப்படும் செயலுக்கும், வாக்கின் வழிப்படும் சொல்லுக்கும் மூலமாக நிற்பது மனத்தின் செயலாகிய நினைப்பே யென்பதும்; மனத்தில் நினைப்புத்தோன்றிய பின்னரே சொல்லுதலும் செய்த

லும் நிகழ்வனவல்லது மனம் ஒன்றையும் நினையாதபோது சொல்லுதலும் செய்தலும் நிகழாவென்பதும் யாவரும் அறிந்தனவே ஆதலின திரிகரண சுத்திவேண்டுமாயின் முதலில் மனமொன்றை மட்டும் சுத்தப்படுத்திக் கோடலே சாலும். மனச்சுத்திவந்தவுடன் ஏனைய இரண்டும் தாமே வரும். கற்றுக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டாபரராக இருந்த பெரியோர் பலரும் மனத்தின் தன்மையை நன்குணர்ந்தமையாலன்றோ அம்மனத்தை அடக்கவேண்டுமெனவும், மனம் அடங்காவழி நன்மையடைய முடியாதெனவும், மனம் ஒன்றை மட்டும் தன் வசப்படுத்திக்கொண்டால் உடனே மோக்ஷ வீடு சித்திப்பது நிச்சயமெனவும், மனத்தைச் சீர்ப்படுத்த முடியாமல் அது போனவழியே விட்டுவிட்டால் மீளா நரகிற்கே ஆளாகவேண்டுமெனவும் கூறுவாராயினர்? மனமானது எதனிடத்துப் பற்று வைத்ததோ அதனிடத்து முற்றும் ஈடுபட்டு அதன்மயமாகி விடும். தான் நன்மையான தொன்றைச் சிந்திப்பின் அச்சிந்தனைமுதிர்ச்சியால் எல்லாம் நன்மையாகவே காணும். தீமையான தொன்றைச் சிந்திப்பின் எல்லாம் தீமையாகவே காணும். ஒருவன் ஒரு புலியைக்கண்டு மனம் பதறி மிக்க பயங்கொண்டுவரின் அவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டனவெல்லாம் புலியாகவே தோன்றும். இங்ஙனம் மனத்தின் நினைப்புவலிமையால் தோன்றும் உருவை உருவெளித்தோற்றம் என்பர். சீதா பிராட்டியின் வடிவழகைச் சூர்ப்பநகை சொல்லக் கேட்டு ஆசைமேலீட்டால் பிராட்டியின் நினைவைத் தவிர வேறெல்லாம் மறந்த இராவணன் எங்கே பார்த்தாலும் தன் கண்களுக்குச் சீதாபிராட்டியின் வடிவமே தோன்ற அதைக்கண்டு ஆச்சரியமடைந்து தங்கையாகிய சூர்ப்பநகையை வரவழைத்து, "ஏ தங்காய்! இவள்தானோ நீ கூறிய சீதை;" எனக்கேட்டான். ஸ்ரீராம பிரானது வடிவழகிலீடுபட்டு ஆசைமீறிஎல்லாம்இராமபிரானின் திருவுருவாகவே கண்டு நிற்கும் சூர்ப்பநகை தான் நிற்கும் இடமும் தமையன் கேட்பதும் மறந்து "இவன்தான் இராமன்" என்று விரைந்து பகர்ந்தனள். அது கேட்ட ராவணன் வியப்பெய்தி நான் கண்டது பெண்ணுருவமாக நீ ஆணுருவாகக் கூறுவதென்னையோ என வினவினன். அவள் சிறிது நினைவுபெற்று தமையனை வணங்கி "அண்ணா தாங்கள் கண்ட உருவம் சீதையன்று. இங்ஙனம் தோன்றுவது தங்கள் ஆசைப்பெருக்கத்தால் தோன்றும் உரு

வெளித்தோற்றமேயாகும்" என்றாள். "ஆயின் யான்கண்டது சரி. நீ இராமனிவனென்றனையே அதன் காரணமென்ன" என வினவ, "இராமன் என் மூக்கை யறுத்து மானபங்கம் செய்தது முதல் அச்சம் அதிகரித்தமையால் எனக்கு எங்குபார்த்தாலும் இராமன் வடிவமே காணப்படுகின்றது" என்றாள்.—எனக்கம்பர் கூறுகின்றனர்.

"பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவ னேருற நோக்கு நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயிலின்னறென வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொல இயம்பிய சீதை யென்றான்.

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயி னோடும்
சந்தார்தடந் தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தார கலத்தொடும அஞ்சனக் குன்ற மென்ன
வந்தான் இவ னாகுமவ் வல்வில் இராமன் என்றாள்.

பெண்பா லுரு நானிது கண்டது பேதை நீயின்
டெண்பா லும இலாதனெ ரா னுரு என்றி என்னே!
கண்பா லுறும் மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல் வினைப்பவர் மாயை யென்றான்.

அன்றும்முனார் வப்புற மொன்றிலு மோட லின்றி
ஆன்றும்முன தாநெடி தாசை கனற்ற நின்றாய்க்
கேனறுன்னெதி ரேவிழி நோக்கும் இடங்கள் தோறும்
தோன்றுமஅனை யாள்இது தொன்னெறித் தாகும் என்றான்.

அன்னாளது கூற அரக்கனும் அன்ன தாக
நின்னாலவ் விராமனைக் காண்குறும் நீரென் என்றான்
எந்நாள் அவன் என்னையித் தீர்வறும் இன்னல் செய்தான்
அந்நாள்முதல் யானும் அயர்த்திலன் ஆகும் என்றாள்."

ஆஆ! மனத்திற்கு எவ்வளவு வன்மையிருக்கின்றது? ஒருவனுயிர்க்கு நன்மை செய்வதும் கேடுசெய்வதும் இம்மனத்தையன்றிப்பிறிதொன்றுண்டோ? மனம் யாதானும் ஒன்றை யன்றி நினைக்குமாயின் நினைக்கின்ற தான்வேறு; நினைக்கப்படுபொருள்வேறு என்பதின்றித் தானே அதுவாய்விடுகின்றது. இக்கருத்தையே இராவணன் சீதாபிராட்டியை மோகித்த சமயத்தில் அவனது நிலையைக் கூறவந்த கம்பநாடர்:-

"சிற்றிடைச் சீதையென்னும் நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றால் ஒன்றொழித் தொன்றை யுன்னி

"மற்றொரு மனமும் உண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞானம் இனமேல காமத்தைக் கடக்க லாமோ"

எனக் கூறியிருக்கின்றார். இஃதென்னே! செய்யுளிலக்கணம் கற்றுப்புகுக மாணாக்கனொருவன் அதே சிந்தனையாக உருப்போட்டுக் கற்றுவருநகால் அவனுக்கு உணவுபடைத்த அன்னை நெய்யூற்று தற்கு மறதியால் வேப்பெண்ணெயை எடுத்து ஊற்றினளாக அவன் சிந்தனை படிப்பிலேயேயிடுபட்டிருந்தமையால் கசப்பறியாது வழக்கப்படி யுண்டுசென்றான். அன்னையோ தான் மறதியால் வேப்பநெய்யை யூற்றியதை யுணர்ந்து மகன் படிப்பிற் கொண்ட காதல மிகுதியால் கைப்பறியாது புசித்தகன்றானென்பதையும் கருதி இவனுக்குப்படிப்பில் எத்தனைகாலம் இந்த ஊக்கமிருக்கின்றதென் பதை யறிந்து கொள்ளும் பொருட்டுத் தினமும் நிம்ப தைலத்தை யே சோற்றிற் பெய்துவந்தனள். இங்ஙனம் சின்னாட் சென்றபின் யாப்பிலக்கணபாடம் படித்து முடிந்தவுடன் மைந்தன்மனம் முன் னிருந்த நிலையைவிட்டுத் திரும்பிற்று. அன்று வந்து வழக்கப்படி யுண்ணும்போது "தாயே நெய் கசக்கின்றதே" என்றான். தாயு மதுகேட்டுக் "குழந்தாய்! இன்றுதான உனக்குப் படிப்பும் கசந்தது போலும்" எனப்பகர்ந்தனள். பின்னர் அன்னை தான் செய்து வந் ததைக் கூற, மைந்தன் தான் காரிகைநூற் பாடந் தொடங்கிக் கவ லையுடன் கற்று முடித்தமையைக்கூற, இருவரும் மகிழ்ந்தனர். எனக் கர்ணபரம்பரையிற் கூறுங் கதையை நோக்கினும மனத்தைப் பற்றி மேலே கூறிப்போந்தவை யனைத்தும மெய்ம்மை யென்பது தெள்ளிதாமன்றோ!

இந்த மனம் என்னும் யானையானது காமாதி மதங்கொண்டு, பிரபஞ்சக் காட்டிற்புக்கு, அறவகைத் தருக்களை யொடித்து, துய ரக் [illegible]வில் ஆழ்ந்து கெடாதபடி அறிவென்னும் அங்குசத்தாலட க்கி, ஒழுக்க மெனனும் பாசத்தாற் பிணித்து, தியானம் என் னும் கூடத்தில் நிறுத்தினால், அருளென்னுந் தெண்ணீர்பருகி யின் புறுதற் குரியதாகும். இங்ஙனம செய்வித்தல் ஞானமென்னும் பாகனது கடமை. பாகனாகிய ஞானம தன் கடமையைச் செய், யாவழி மதம பொழியும் யானை தன்பாகனைக் கொனறுதொலைத்தல் போலவே மனமும் தன்பாகனாகிய ஞானத்தைக் கொன்றுவிடுதல் யுறுதலே.

மனத்தை யடக்குவதென்றால் சுலபமான காரியமன்று. அது கல்லினும் கடிது; கல்லைச் சிற்றுளியால் எவரும் தகர்த்துவிடலாம். இதனைத் தகர்த்தலரிது. காற்றினும் கடிது; வாயுவேகமெனக் கூறத் தகக பிரசித்திபெற்ற காற்று பொதியமலையிலிருந்து இமயமலைக்குச் செல்வதென்றால சில காலஞ்செல்லும். மனமோ லோகாந்தரங்கட்கும ஒரு நிமிஷத்திலும் மூரதிசசெல்லும். தீயினும் கொடிது; தீயை நீரால் அவித்து விடலாம. கடற்குள் புகினும அருவியில் தோயினும் மனத்தீயை அவித்தலியலாது. கடலினும் பெரிது; தோணியின்றுணையால் யாவரும் கடலைக் கடத்தலமையும். இம் மனத்தைக் கடத்தல் மிக அரிது. யமனினும் அஞ்சத்தக்கது; யமன் நியதிபெற்ற ஒருகாலத்தில் கொல்வான். இப்பாவிமனமோ நிமிஷந்தோறும் கொன்றுகொண்டிருக்கும். அம்மம்ம! இதன் செய்கையை உற்றுநோக்கினால் சாபானுக்கிரஹ சிலர்களும்,நடுநடுங்கி அஞ்சக்கூடியவரன்றோ! "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற செயலரிது" என்றார் தாயுமானவர்,

முற்பிறப்பிலே நாம் செய்த புண்ணிய பாவங்களெல்லாம் இப்பிறப்பிலே நாமனுபவிக்கும் சுகதுக்கங்களாக வந்து பரிணமிக்கின்றன. இப்பிறப்பிற் செய்யும் நன்மை தீமைகள் இனிவரும் பிறப்பிற்கு வித்தாகி அப்போது நமது சுகா சுகங்களாகின்றன. ஆகவே நன்மை தீமை யிரண்டும் பொன்விலங்கும் இருப்பு விலங்கும் போற் பந்தித்து நிற்பனவேயாகும். ஆகவே இருவினைப் பற்றையும் ஒழித்து "என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனவும், "கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" எனவும், அருட்பெருந்தகையாளர் கட்டளை யிட்ட வாறு எவ்வித இன்பங்களையும் விரும்பாது சிவபிரான் திருவடிமலர்களையே சிந்தனை செய்யவேண்டும். இச்சிந்தனைதான் பிறவிப் பிணிக்கு மருந்தாவது. முழுமுதற் கடவுளுடன் இரண்டறக் கலப்பதாகிய சிவசாயுச்சிய பதவியைத் தருவது. ஒருவன் மரணாந்த காலத்தில் அவன்மனம் எதைப் பற்றுகின்றதோ அதுவே அவனுக்கு அடுத்த பிறப்பாக வந்து கூடும்.

ஆதலின் இறுதிக்காலத்தில் உலகப்பற்றில் மனம் புகாமல் சிவபிரான திருவடி மலர்களையே மெய்யன்புடன் சிந்தனைசெய்யு,

வேண்டும். உள்ளாளுள்ளமட்டும் மாயாவலையிற் சிக்கிப்பந்திக்கப் பட்டுநின்று, பண்ட பதார்த்த பெண்டு பிள்ளைகளிடத்தே பற்று மிககொண்டு வாழ்ந்து, இறுதிக்காலத்தே திடீரென்று எல்லாப் பற்றையும் விட்டொழித்து இறைவன் திருவடி மலர்களைத் தியானிப்பதென்றால் முடியத்தக்க தொன்றன்றே! பன்னாட் பழகிய வாசனைதானே மேலெழுந்து நிற்கும். மனைவி என் செய்வாள்? புத்திரனுக்கு விவாகமாக வில்லையே? வீடுகட்டி முடிக்கவில்லையே? யென்பன வாதிய பலவகைப் பந்தங்கள் வந்து சூழ்ந்து மனத்தைப் பிணித்துக்கொள்ளும். இந்தச் சமயத்தில் இஞ்சி தின்ற குரங்கு போலப் பசபசவென்று விழித்து மதிமயங்கிக் கண்ணீர் வடித்து மெய் நடுநடுங்கிக் கைகால் சோர்ந்து வாய் புலர்வுற்று நெட்டுயிர்ப் பெய்தி விம்மி விம்மித் தியங்குவதல்லது பரம கருணாநிதியாகிய சிவபிரான் திருவடி நீழலைச் சிந்தித்தல் சாத்தியமன்றே? ஆதலின் கடைக்காலத்திற் சிவத்தியானம் செய்தற்கு வழி யாது? என்பதே இனி ஆராய்ச்சிக் குரிய விஷயமாயிற்று.

மரிப்பவன் மனமானது மனைவி மக்கள் பொன் பூமி முதலியவற்றைச் சிந்திப்பதற்கு என்ன காரணம்? மனத்துக்கும் அவைகட்கும் என்ன சம்பந்தம்? எதனால இச்சிந்தனை யெழுகின்றது? என்று நீளநினையுமிடத்து மனமானது இப்பொருள்களுடன் பிறந்ததன்று. வளர்ந்ததுமன்று. பன்னாட்பழகிய பழக்கமேலீட்டால் வந்த பற்றுக்கோடே யொழிய வேறில்லை. மனம் எதனிடத்தே அடுத்தடுத்துப் பழகுகின்றதோ அதனிடத்தே பற்றுதல் மிக்கு அதன் மயமே யாகின்றது. ஆனது பற்றி நாம் திடகாத்திரத்துடன் இருக்கும்போதே உலகப்பற்றுக்க ளெல்லாவற்றையும் சிறுகச் சிறுகவிட்டு, விட்ட அளவிற்கேற்ப இறைவனிடத்தே பற்றுதலைச் செலுத்தி வருவோமாயின், நாளடைவில் எல்லாப் பற்றுக்களும் முற்று மொழிந்து சிவத்தியானமே மேற்பட்டு நிலைபெறும். இத்தியானம் வேரூன்றித் தங்கப்பெற்றால் கள்ளக் காதலனிடத்தன்பு கலந்து வைத்தொழுகும உள்ளக் காரிகைபோல "எத்தொழிலைச் செய்தாலும ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்குமோனத்தே" என்றவாறு எந்தத் தொழிலைச் செய்யுங்காலத்தும் ஈசுவரத்தியானமே முற்பட்டு நிற்பதாகும். காம் உண்பன உடுப்பன யாவும் சிவார்ப்பணமாகவும் எல்லாம் இறைவன் செயலேயெனவும் கடைப்பிடித்து, இன்பமெய்தினும துன்பமெய்தினும் சிவா என்ற மெய்ம்மொழியை மறவாது கூறிவரவேண்டும். இங்ஙனமே பழக்கத்திற் கொண்டு வந்துவிட்டால் இறுதிக்காலத்தும சிவ

சித்தனையே நிலையுறு மென்பது நிச்சயம். இதனை யல்லது வேறு எவ்வித வுபாயங்களும் இத்துணைப் பயனுதவுவதன்று. அவாவே பிறவிக்கேது வென்பதை "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்னும் திருவள்ளுவராலும், இறுதிககட் போதரும் சிந்தனை அடுத்துவரு பிறப்பாகு மெனபதையும, அப்போது ஈசுவரத்தியானம் வருகற் பொருட்டு எப்போதும் அத்தியானத்திலேயே பழகிவரவேண்டுமென்பதையும்,

"மரிக்கும்போ துன்னும் வடிவினை யாவி
பரிக்கும நினைவு பரிதது"

"ஆதலினுற் சுற்றத் தவரைநினை யாதமலன்
பாத நினைக பரிந்து" என்னும் சோமவார விரத கற்பத்தாலும்,

"நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்று ளிணை" என்னும் வருத்த மறவுய்யும்வழியா[லும்

"உடம்பி னீக்குங் காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப் பட்டது அஃது அதுவாய்த்தோன்று மெனபது எல்லா ஆகமங்கட்குந் துணிபாதலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேது வாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டும். அதனுல் அதனை முன்னே பாவித்தலாய இதனின் மிக்க வுபாய மில்லையென்பதறிக" என்னும் பரிமேலழகர் கருத்து முதலியவற்றுலும நனகு தெளியலாம்.

"அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே
னதுவு நான்படப் பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னுகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறி யேனமறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கோர்மருந் துரையா
யொற்றி யூரெனு மூருறை வானே"

என்னும் சுந்தரமூர்த்தி நாயனர் திருவாக்கும்,

"அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா வுன்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்று யென்ற போதில் இங்குற்றேன் என்கண் டாயே"

என்னும் திருநாவுக்கரசு நாயனர் திருவாக்கும் மேற்கூறிப் போந்தவற்றைய வலியுறுத்துவனவா மென்க.

மேற்கூறிப் போந்த உண்மையைக் கைக்கொண்டு எக்காலத்தும் சிவத்தியானத்தை மறவாது பயின்று வருவோமாயின் "பழக்கங் கொடியதுபார் பாறையையும் கோழி கிழிக்கும்" என்றாங்கு எச்சமயத்தும் சிவா என்ற மெய்ம்மொழியே நாவிற் பதிந்து மேவிடும். "நற்றவா வுனை நான்மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்ற வண்ணம் பயிற்சி பண்ணிக் கொண்டால் எல்லாப் பேறும் எய்தல் எளிதாம். ஆதலின், "சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க், கபாய மொருநாளு மில்லை." என்ற முதுமொழியையே பின்பற்றவேண்டும்.

அங்ஙனம் சிவத்தியானம் செய்து வருவோமாயின், எல்லாப் பொருள்களிடத்தும் பாலினுள் நெய்போல் வெளிப்படாதிருக்கும் பரம்பொருள் நம்மிடம் தயிரினுள் நெய்போல் வெளிப்பட்டு நின்று உண்ணப்படுவனவாகிய உண்டிப்பொருள்களானும், அநுபவிக்கப் பெறும் மனைவி முதலியோரானும், யாவரும் வணங்கத் தக்கதாகிய அரசாட்சியானும் அடையும இன்பத்தினும் சிறந்ததொரு நல்வின்பத்தையே நாளும் நல்கி வினைகழிந்தாய் யாக்கை யொழிவில் முத்திப் பேரின்பத்தையும் தந்து வாழ்வித்தல் ஒருதலையென்க. இது நலன்றோ? "கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும், பனி மலர்க்குழற் பாவைநல் லாரினும், தனி முடிகவித் தாளும் அரசினும், இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே" என்றார் திருநாவுக்கரசு நாயனார்.

சங்கராசாரிய சுவாமிகள் சிவபிரானைப் பிரார்த்திக்கு மோரிடத்தில் "சுவாமி! அடியேன் மனம் குரங்கா யிருக்கின்றது. இதனால் எனக்குச் சிறிதும் நன்மையில்லை. தேவரீரோ பிக்ஷாடன மூர்த்தியாகி கையில் ஓடெடுத்துத் திரிபவராதலால் இக்குரங்கை தேவரீரே ஏன்று கொள்ளவேண்டும். பிச்சை புகுபவர் குரங்கைக் கைக்கொண்டு சென்றால் எளிதிற் பிச்சைகிட்டும் ஆதலின் தேவரீருக்கே ஏற்றதாகும்" என்று இக்கருத்தையே நனகு விஸ்தரித்துக் கூறியிருத்தலும் நோக்கத் தக்கதாம. இதனால் மனத்தைச் சிவ பிரானிடத்தே சேர்க்கவேண்டு மென்ற ரகசியமும், அது மிகவும் அருமையாதலின் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற வண்ணம் இறைவன் திருவருளாற்றான் கிடைப்பதாகும் என்ற வுண்மையும் விளக்கப்பெறறிருத்தல் மிகவும் பாராட்டற்பாலதொன்றேயாம்.

இதுகாறுங் கூறிப்போந்த வண்ணம் இடையறாப் பேரன்பு கொண்டு சிவத்தியானம் செய்து வரும்பொருட்டு வேண்டுவார் வேண்டுவதேயீயும் பரம கருணாநிதியாகிய முழுமுதற் கடவுள் முன்னின்று திருவருள் சுரந்து காத்தருள்க. சுபம்! சுபம்! சுபம்!

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

# ஆடு கோழிகளின் அடைக்கல விண்ணப்பம்.

இந்து மகா ஜனங்களே!

தயவு செய்து அநாதைகளான எங்களுடைய எளிய விண்ணப்பத்தைக் கவனித்து எங்கள்மீது கிருபை செய்து இரக்ஷிக்கும்படி தங்கள் கிருணையைப் பிரார்த்திக்கிறோம்

நாங்கள் கேவலமான ஜீவ ஜந்துக்கள். எங்களுக்குத் தாய், தகப்பன், தமையன், தம்பி, மாமன், மைத்துனன் என்று பலரிருந்தாலும், ஒருவரையொருவர் காப்பாற்றும் வல்லமையுடையோமல்லேம். ஆனுல் எங்களை நாங்களே காத்துக்கொள்ளும் திறமையுமில்லேம். மகா ஜனங்களாகிய உங்களாலேயே நாங்கள் காப்பாற்றப்பட்டு ஜீவித்து வருகிறோம். எங்களாலான நன்மைகளையும் வஞ்சகமில்லாமல் தங்கள் சமூகத்துக்குச் செய்கிறோம். அதாவது உங்களுக்கு நோய் முதலியன உண்டாகாமல் அசுத்தங்களைப் புஜித்தும், மலஜலங்களைப் புஜித்தும், உங்கள் பிள்ளைகுட்டிகட்கும் உங்களுக்கும் ஆகாரமாகவும் ஔஷதமாகவும் பாலுதவியும் எங்களாலியன்ற நன்மைகளைச் செய்து வருகிறோம்.

அப்படியிருக்க எங்களைப் பிள்ளைபோல் வளர்த்து ஆதரித்த நீங்களே எங்களைக்கொன்று எங்கள் மாம்சாதிகளைப் புஜிப்பது ஞாயமாகுமா?

நிரபராதிகளான எங்கள் கழுத்தையறுத்தும், தோலையுரித்தும், குடலைப்பிடுங்கியும், சதையைத் துண்டித்தும், எலும்பை முறித்தும் சித்திரவதைசெய்து தலை, கால், குடல், ஈரல், மலக்குடல் முதலிய எல்லா அவயவங்களையும் புஜித்து ஆனந்தமடைகின்றீர்களே.

---

* இந்த விஷயமும் அடுத்துள்ள 'மாரியம்மன் உத்தரவு' என்ற விஷயமும் நமக்குக் கிடைத்தன. எழுதியவர் இன்னுரென்று விளங்கவில்லை. ஆயினும் விஷயங்களின் பரிதாபத்தையும் அருமையையும் நோக்கின் இவை தெய்வத்தால் அல்லது தெய்வ அருள் பெற்றவரால் வந்திருக்கவேண்டுமென்று கருதி உலக நன்மையின்பொருட்டு பாதவில் வெளியிட்டிருக்கின்றேம்.

பா.

ஐயா, மகா-ஜனங்களே !!

இப்படி நீங்கள் எங்கள் விஷயத்தில் மனமிரங்காமற் கொடுஞ் செயல் புரிதற்கு நாங்கள் உங்களுக்கு என்ன அபசாரம் செய்தோம்? என்ன பாதகம் செய்தோம்? ஒன்றும் செய்யவில்லையே. ஐயோ! எங்களைப்பிடித்து நீங்கள் கட்டிவைத்திருக்கும்போது கொல்லப் போகிறீர்களென்று நாங்களறிந்து கொண்டாலும் வெளியிட்டுச் சொல்லிக் கெஞ்சிக்கேட்டுத் தப்பித்துக்கொள்ளும்படி இறைவன் எங்களுக்கு வாயைப்படைத்திருக்கவில்லையே. பேசக்கூடாமையால் கதறுகிறோம், அலறுகிறோம், உதைத்துக்கொள்ளுகிறோம். என்னசெய்தாலும் நீங்கள் மனமிரங்காமல் எங்கள் கழுத்தையறுத்து உப்பிட்ட சட்டியில் இரத்தத்தைப் பிடித்துவிடுகிறீர்கள்.

எங்களை ஆதரித்துப் பிள்ளைபோல் வளர்த்த நீங்களே எங்கள் உயிருக்கு எமனாகவும், எங்கள் உடலுக்குச் சுடலையாகவும் இருந்தால் எங்கள் குறையை கேட்பார் யார்? ஐயோ! எங்கள் மாசத்தைக் கருக்கியும், திரக்கியும், உருண்டையாக்கியும், வடையாக்கியும், குழம்பாக்கியும், கோளாச்செய்தும், தோரணங்கட்டிக் காயவைத்தும், சுட்டும், வறுத்தும் வாயார மனமாரப்புஜித்து ஆனந்திக்கின்றீர்களே. நீங்கள்தான் சாகாமல் சிரஞ்சிவிகளாக வாழ்கின்றீர்களா? அல்லது உங்களுக்கு நோய் முதலியன வாராமலிருக்கின்றனவா? அப்படியுமில்லையே. அப்படி உங்களுக்கு நன்மையுண்டாவதாக இருந்தாலும் எங்களை ஆதரித்த உங்கள்பொருட்டு எங்கள் உடலை அர்ப்பணஞ் செய்த உத்தமபலன் எங்களுக்குக் கிடைக்கும்.

## ஐயா, பகுத்தறிவுள்ள மனிதர்களே!

உங்கள் பிள்ளைகுட்டிகளுக்குத் தலை கால் வலித்தாலும் உங்களுக்கு கைகால் வலித்தாலும் உங்கள் வீட்டில் விசேஷங்கள் வந்தாலும் எங்கள் தலைக்கு இடிவிழுகின்றது. உங்கள் குலதெய்வங்கட்கு எங்களைப் பலியிடுவதாகப் பிரார்த்தனை செய்துகொள்ளுகிறீர்கள். உங்கள் பந்துக்களுக்கும் எங்களைப் பிரார்த்தனை செய்துகொள்ளுகிறீர்கள். இது தருமமாகுமா? உங்களுக்கு இரக்கமில்லையா? இது கடவுளுக்குச் சம்மதமா? ஞாயமாகுமா? அப்படி உங்களுக்கு நோய்

சுகஜீவனம் பெறவேண்டுமென்று நாங்கள் ஏதாவது மித்திரபேதஞ் செய்தோமா? கடவுளை நிந்தித்தோமா? மண்ணை வாரித் தூற்றினோமா? ஒருபாவத்தையுமறியோமே. நீங்கள் க்ஷேமமாக வாழவேண்டுமென்றும், நாங்கள் உங்களால் அன்போடு ஆதரிக்கப்படவேண்டுமென்றும் பிரதி தினமும் கடவுளைப் பிரார்த்திக்கிறோமே. அப்படியிருக்க, எங்களைக்கொலைசெய்து எங்கள் குடிகளைக்கெடுத்து நாசமாக்குவது கடவுள் சம்மதமாகுமா? ஐயா! நாங்கள் வாயில்லா ஜீவர்கள், உதவியில்லாத ஜந்துக்கள், அற்பமான புழுக்கள், உங்களையே தஞ்சமென்று நம்பியிருக்கிற கேவலமான ஜீவன்கள். எங்கள் விஷயத்தில் நீங்கள் இரக்கங்காட்டாதிருப்பது நீதியாகுமா?

எங்கள் விஷயத்தில் மனமிரங்கி எங்களைக்கொன்று தின்னக்கூடாதென்று மிகவும் வற்புறுத்திப் பெரியோர்களெல்லாம் ஏடுகளிற்கூட எழுதிவைத்திருக்கின்றார்களாமே. திருவள்ளுவ நாயனார் என்னும் மஹான் எங்கள் விஷயத்தில் முழுமனத்துடன் அவர்களது அருமைத் திருவாக்கால் இரண்டு அதிகாரம் செய்திருப்பதாகக் கேள்வி. இன்னும் பல மஹான்களும் தங்கள் தங்கள் நூல்களிலெல்லாம் எங்கள் பக்ஷமாகப் பரிந்து பேசியிருக்கிறார்களாமே. அப்படியெல்லாமிருப்பதை யறிந்திருந்தும் நீங்கள் எங்களை வதைசெய்வது எங்கள் துரதிஷ்டமேபோலும்.

நாங்கள் எங்கள் குறையை இறைவனிடம் முறையிட்டுக்கொள்ளவும், எங்களை இப்படிகொலையினின்றும் மீட்டுக்கொள்ளவும் அசக்தர்களாக இருப்பதையறிந்து எங்களுக்காக மிகவும் பரிந்து எங்களை ரக்ஷிக்கும்பொருட்டு தமிழ் வடமொழி வித்துவான்களும் தேசாபிமான மதாபிமானமுள்ள உத்தமர்களும் சிவநேயச் செல்வர்களும் இன்னும் பல அறிவுள்ள மனிதர்களும் எங்களுக்கு வக்கீலாய் இனமாக ஆஜராகி எங்கள் கக்ஷியை எடுத்துக்காட்டி எங்கள் பொருட்டு உங்களிடம் இடைவிடாமல் வாதித்துவருகிறார்களாம். அதுவும் உங்கள் செவிகட்கு ஏறவில்லையே! தெய்வ நீதிகூட எங்களுக்கு அநுகூலமாக இல்லாதிருப்பது எங்கள் துரதிஷ்டமேபோலும். ஐயா! இன்னும் ஆலோசித்துப்பாருங்கள். எங்களைக்கொன்று தின்னாத பிராமணர் சைவர், வைசியர் முதலியோர்களை நீங்கள் உயர்ந்தவர்களெனப்

றாமதிக்கின்றீர்களே அப்படி மதிக்கின்ற நீங்களும் புலாலுண்பதை விட்டும், பலியிடுவதைவிட்டும் ஏன உயர்ந்தோராகக்கூடாது!

எங்களைக் கொன்று தின்னாத மனிதர்களெல்லாம் நல்ல சரீர பலமும் புத்திநுட்பமும, விசால அறிவும், நீண்ட ஆயுளும் உயர்ந்த ஆசாரமும உடையோராக இருப்பது நீங்கள் அறியாத விஷயமா? எங்களையும் இன்னும பெரிய மிருகங்களையும் புசித்துவந்த அன்னிய தேசத்தார்கூட இப்போது இரக்கமும ஜீவகாருண்ணியமும் மேலி ட்டு எங்களைப் புசிக்காமல் நீக்கிவருகிறார்களாம. இயற்கையிலேயே ஜீவகாருண்ணியமுள்ள நீங்கள் கண்டபடி தின்னுவது என்ன கொடுமை! அந்தோ ஜீவகாருண்ணிய மிகுந்துவருகிற அன்னிய தேசங்கட்குப்போய்த் தப்பிப் பிழைக்கலாமென்றாலும்—கப்பல், இரயிலுககு கையிற் காசு கிடையாதே! கிடைத்துப் போய்ச்சேர்ந்தாலும் அங்கும் உங்கள் வகையார் இருப்பார்களே! ஐயோ ஒருவழியாலும் தப்பிககு இடமில்லையே!

எந்தச் சண்டாளன் காலத்தில் உங்கள் பாரம்பரையார், எங்கள் பாரம்பரையாரைத் தின்னுவது என்ற உடன்படிக்கை ஏற்பட்டதோ தெரியவில்லையே. போனது போகட்டும். இனியாவது எங்கள்மீது கிருபை செய்து எங்களைக் காளி கருப்பனுககுக் காட்டிக் கொல்லாமலும, கல்யாணம் காட்சிகளில் எங்கள் உயிரை வாங்காமலும், நீஙகள் மீளா நரகிற்கு ஆளாகாமலும், உங்கள் திருக்கைகளையும், திருவாய்களையும் வணக்கமாகப் பிரார்த்திககின்றோம். இது போலவே உலக மாதாவாகிய நமது மாரியம்மைகட்கும் இந்த வருஷத்தில் மனுச் செய்துகொண்டிருக்கிறோம்.

இங்ஙனம் அடிமைகள்

(ஒப்பம) ஆடு, கோழிகள்.

நாஙகளும் அப்படியே பிரார்த்திக்கிறோம்.

அடிமைகள்,

(ஒப்பம்) மீன்குஞ்சு, மான்கன்று வகையராக்கள்.

# மாரியம்மையின் உத்தரவு.

பிரஜைகளே!

ஆடுகள் கோழிகள் மீன்குஞ்சுகள் மான்கன்றுகள் முதலிய எளிய பிராணிகள்கூடி இந்த வருஷத்தில் நமக்கு அனுப்பியிருக்கும் ஒரு பரிதாபமான மனுவினால் நாம உங்கள்மீது அளவில்லாத மனஸ்தாபம் அடைகின்றோம. அந்த மனுவிற் கூறியிருக்கிற எல்லா விஷயங்களும யதார்த்தமானவையேயாகும். நிரபராதிகளான அந்த ஜந்துகளை நீங்கள் கொலைசெய்வது பெரிய அக்கிரமம்.

நம்மைத் திருப்திசெய்து நம்முடைய அனுக்கிரகத்தைப் பெறுதற் பொருட்டு நீங்கள் அவைகளைக்கொன்று நமது சந்நிதியிற் பொங்கலிடுகின்றீர்கள். இந்த அக்கிரமமான செய்கையால் நாம் ஒருபோதும் திருப்தியடையமாட்டோம். உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்பவும் மாட்டோம.

நமது சந்நிதியைக் கொலைக்களமாக்கி, நம்முடைய பெயரைக் கெடுத்து நமது வீதிகளையெல்லாம் அசங்கியமான இரத்தவாடை வீசச்செய்து, நீங்களும் கொலைப்பாவமாகிய பெரும் பாபத்துக்கு ஆளாகின்றீர்கள். ஆனால் அப்பழியை நமது தலையிற் சுமத்தப் பார்க்கின்றீர்கள். நாம உங்களை அப்படிச் செய்யும்படி தூண்டாததோடு அக்கொடுஞ் செயலை முழுதும் வெறுக்கின்றோம். உங்கள் அறியாமையால் நீங்கள செய்கிற இக்குற்றத்திற்கு நீங்களே ஜவாப்தாரிகளாகின்றீர்கள்.

மனிதர்களாகிய உங்களைப்போலவே ஆடு கோழிகளும் மீன்கள் முதலிய எல்லா ஜீவவர்க்கங்களும் நமது கருணைக்குப் பாத்திரப்பட்டவைகளேயாம. அப்படியிருக்க அவைகளைப் பலிவாங்கி உங்களை ரக்ஷிப்பது நமதுபெருமைக்கு மிகவும் குறைவுடையதாகும்.

ஆதலால் இதன் மூலமாக நாம் செய்கிற உத்தரவென்னவென்றால், இது முதல நம்முடைய சந்நிதானத்தில எந்த ஜீவனையும் கொலை செய்யவாவது ஹிம்சிக்கவாவது கூடாது. அப்படிச் செய்தால நம்முடைய கடுமையான ஆக்ஞை உங்களைப் பெரிதும் பாதிக்குமென்பதை யறியவும்.

நம்முடைய அனுக்கிரகத்தைப் பெறவேணுமென்றால் நீங்கள் மிகவும் பரிசுத்தமாக நமது சந்நிதானத்தில் அன்போடு பாற்பொங்கலிட்டு உங்கள இஷ்டசித்தியைப் பெறக்கடவீர்கள்.

(ஒப்பம்) உங்கள் அன்புள்ள

மாரியம்மை.

நாங்களும் அப்படியே உத்தரவு செய்கிறோம்:

காளிக்கறுப்பன் வகையராக்கள்.

# ஐயவினாத் தொடர் விடை.

---

நமது செந்தமிழ்த்தொகுதி II, பகுதி I ல் 'ஐயவினாத் தொடர்' என்ற தலையகத்தின் கீழ்ச் சகோதரரொருவர் நமக்குத் தோன்றிய ஐயவினாக்களிரண்டைத் தெரிவித்திருக்கின்றனர். அவற்றின் முக்கிய பாகத்தை மாத்திரமெடுத்து அடியில் எழுதியிருக்கின்றேன்.

வினா I. (a) யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலுள் "அருகிக் கவி" என்ற காரிகையின் உரையில் உரையாசிரியர் "இரட்டைத் தொடைக்கும்" என்ற உம்மையால் ஒழிந்த மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னும் தொடை நான்கிற்கும் இவ்வாறே கூட்டிக் கொள்க; அவை கூடி வழங்குமாறு:—என்று, "கடையே கடையிணை பின், கடைக் கூழை, யிடைப்புணர்வு" என்றவற்றை முறையே முற்கூறிய நான்கின்பாலுஞ் சார்த்தி "இவற்றிற் கிலக்கியம்" யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. என்றதால் அவ்விருத்தியில் கடையிணையியைபு, பின்னியைபு முதலியவற்றிற்கு உதாரணம் வருமாறெங்ஙனம்? அவை யெவை?

(b) "இறுதியியைபு" என்றமையான் விகற்ப இலக்கியம் காட்டுகையில் மோனை, எதுகைகளுக்குக் குறிப்பிட்டிருக்கிறபடி முதற் சீரினன்றோ, இறுதியில் வரவேண்டும்? அங்ஙனமாயின், "கடையிணையியைபு" க்கு ஈற்றிலிருந்து இலக்கியம் காட்டிவரவியலும்; ஆனதால், "மொய்த்துடன் றவழும் முகிலே பொழிலே" என்பது "இணையியைபு" க்குப் பொருந்துமா? "கடையிணையியைபு" என்றலாகாதோ? "வில்லே யுதலே வேலே கயலே" என்பது "இணையியைபு" க்கு இலக்கியமன்றோ? மயங்கினவென? காரணம் விளக்கவேண்டுவல்.

வினா II. (க) திருக்குறள் 532, 199, 246, 534 பாக்களிலுள்ள பொச்சாப்புக்கு மறவி என்றே பரிமேலழகியார் உரையெழுதிச் செல்கின்றனர். இதனால் பொச்சாப்பும் மறவியும் ஒன்றென்றே உரையாசிரியர் நினைத்தனர் போலும்; அன்றாயின், நன்னூல் உரியியல் "அறிவருளாசை" என்னுஞ் சூத்திரத்தில் "பொச்சாப் பூக்க மறமத மறவியி னைய" என்று உயிர்க்குணத்தில் பொச்சாப்பும், மறவியும் வேறாய் வகுத்துணர்த்துவரோ ஆசிரியர் பவணந்தியார்;

இரண்டும் வேறென்று கூறிய வா கருத்துடன் ஒன்றென்றே பொருள் கொண்டவா கருத்தைப் பொருந்துமா? வழக்கத்தில் முன்னவையே சான்றாகின்றனவா; இவற்றின் காரணம் வேண்டுவன.

இவ்வினாக்கட்கு உத்தரம் வருமாறு:—

விடை I. (a) யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்வான்-ஸ்ரீ. அ. குமாரசுவாமிப் பிள்ளை யவர்களால் இபற்றப்பெற்று வெளிப்போந்த "யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையில்" "இரண்டு தொடைக்கும்" என்பதிலுள்ள உம்மையை எச்ச உம்மையாகத் தழீஇ-மற்றை நான்கு தொடைக்கும் கடை, கடையிணை, பின், கடைக்கூழை, இடைப்புணர்வு இவற்றைச் சார்த்தி எழுதப்படாமலிருந்ததைக் கவனிக்க. முன்னர் அச்சிடப் பெற்ற யாப்பருங்கலக் காரிகை உரையில் இரண்டு தொடைக்கும் என்பதிலுள்ள உம்மையை எச்சவும்மையாக் கொண்டு மற்றைத் தொடை நான்குக்கும் கடை முதலியன நான்கும் சார்த்தி எழுதியிருக்கின்றதேனின், அதற்குச்சமாதானம் மேற்கூறிய யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையின் முகவுரை உபக்கிரமணிகைகளைப் படிப்பின் கிடைக்கும்.

அன்றியும், இயைபுத்தொடையின் இயைபு இலக்கணம் எவ்வாற்றானும் பொருந்தாது இது ஆராயின் தெரியும். ஆகவே, பின் இயைபு முதலிய வருமாற்றையும் அவற்றிற்குரிய உதாரணத்தையும் காட்டலாகாமை உணர்க. யாப்பருங் கலக்காரிகையின் பழைய உரையாசிரியர் கூறியபடி யாப்பருங்கல விருத்தியில் காட்டியிருக்கக் கூடுமெனின், அது அவ்விருத்தி அச்சுவாகன மேறிவந்த பின்னன்றோ உணரக்கூடும்? ஈண்டு அது கிடக்க.

(b) "மொய்த்துடன் றவழும் முகிலே பொழிலே" என்பது கடையிணை இயைபுக்கு இலக்கியம் ஆகாது; "வில்லே நுதலே வேற்கண் கயலாம்" என்பது இணையியைபுக்கு இலக்கியம் ஆகாது. எனின்? "இறுதியியைபு" எனலால் இறுதிச் சீரையே முதலாகக் கொண்டு இயைபுத்தொடையின் விகற்பங்களை யெல்லா மறிதல் வேண்டும்; மற்றைத்தொடை நான்கன் விகற்பங்களையெல்லாம் முதற் சீரையே முதலாகக் கொண்டு அறிதல் வேண்டும். இவ்விதி

யால் மொய்த்துடன் றவழும் முகிலே பொழிலே என்பதும், "வில்லே நுதலே வேற்கண் கயலாம்" என்பதும் முறையே கடையிணை யியைபு, இணையியைபு ஆகாமை காண்க. அல்லாமலும் மேற்கூறிய வாறு இயைபுத்தொடை விகற்பங்களை யறிதல் தொன்று தொட்டு வரும் முறை. இது சொல்லளவன்று; இலக்கியத்திலும் காட்டுவல். அவ்விலக்கியம் அடியில் வருவன.

சிதம்பரச் செய்யுட் கோவை.

திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு—பெருமான்
றிருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு. (1)

ஏழடிப் பஃறொடை வெண்பா.

வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந் தார்ப்பத்
தண்டேட விறைக்கு மிகழி நறுங் கண்ணி
யெண்டோண்முக் கண்ணு னிமையம் புனைமன்றி
லண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வன்றின் மறலி புடைத்துக் கொடிதுடைக்கு
மன்று முருகிர்கொல் லாம். (2)

வானே நிலனே கனலே மறிபுனலே
யூனே யவ்வூனி லுயிரே யுயிர்த்துணையே
யானேறு மேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியோங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
யானு மெனாதென்மற் றார்பெற்றா ரம்பலத்துண்
மானா டகங்காணும் வாழ்வு. (3)

இவற்றுள் 1-ம் பாட்டு அடிகள் தோறும் இறுதிச்சொல் ஒன்றி வரத் தொடுத்தமையால் அடியியைபுக்கு இலக்கியமாதலும், 2-ம் பாட்டு 2-ம் அடி 1, 2. சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் இணையியைபுக் கிலக்கியமாதலும், ௸ பாட்டு 4-ம் அடி

1, 3 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத்தொடுத்தமையால் பொழிப்பியைபுக்கு இலக்கியமாதலும், 3-ம் பாட்டு 1-அடி 1, 2, 3, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் முற்றியைபுக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 2-ம் அடி 1, 2, 4 சீர்களின ஈற்றெழுதது ஒன்றிவரத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாயியைபுக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 3-ம் அடி 1,2,3 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் கூழையியைபுக்கு இலக்கியமாதலும், ஷை பாட்டு 4-ம் அடி 1, 3, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுததமையால் மேற்கதுவாயியைபுக்கு இலக்கியமாதலும் ஷை பாட்டு 5-ம் அடி 1, 4 சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையால் ஒரூஉ இயைபுக்கு இலக்கியமாதலும் காண்க. இங்கு மேற்கூறியாங்கு இறுதிச் சீரையே முதலாகக் கொண்டு கணக்கிடப் பட்டன்தைக் கருதுக.

II. (a) ஆசிரியர் பரிமேலழகியார் 532, 199, 246, 534 திருக்குறட்பாக்களிலுள்ள பொச்சாப்புக்குப் பொருளாகக் கொண்ட மறவியின் பொருள் வேறு; ஆசிரியர் பவணந்தியார் உயிருடைப் பொருட்களின் குணப்பண்பு உணர்த்துவான் தாமருளிய "அறிவருளாசை" என்பதை முதலாகக் கொண்ட சூத்திரத்திலுள்ள மறவியின் பொருள் வேறு. இவற்றுள் முன்னையது மறத்தலையும் பின்னது மறந்து செய்யுங் குற்றத்தினையும் உணர்த்தும். இங்ஙனம் மறவியென்னுஞ் சொல் இரு பொருள் உணர்த்துவதை "வழுக்கு மறவி மயர்ப்பு மிவறலு, மறப்பென் கிளவி மறலுமாகும்" எனவும், "இழுக்குஞ சோாவும் புன்மையு மிகழ்ச்சியும், வழுக்குங் கேழ மறவியும் பொலலாஙகும், பொச்சாப் பென்பது புகலும் பெயர்க்கே" எனவும் வரும் பிங்கலந்தைச் சூத்திரங்களாற்றேறுக. இவற்றால் இரண்டாசிரியர் கருத்தும் மாறுபடாது பொருந்துமாறு காணக இனி, பொசசாப்புக்கு மறப்பெனனும் பொருளுளதோ வென ஐயநிகழின அதனைப் "பொச்சாப்பு மறவியேதாம்" என்ற 11-வது கிகண்டுரை கொண்டு தெளிக.

இங்ஙனம்,

அ. முத்தைய முதலி,

ஸ்ரீ ஞானியார் மடாலயத்தச சுவாமிகள் மாணவருள் ஒருவன்

பாங்கிப்பேட்டை.

ஸ்ரீ:

# திருக்குறட் பாயிர ஆராய்ச்சி.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தம் பொதுமறையின் தொடக்கத்தே, பாயிரமாகக் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கதிகாரங்கள் கூறிப் பின்னரே தம் பெருநூலை நடத்திஇருத்தல் யாவரும் அறிந்தது. இங்ஙனம் கடவுள்வாழ்த்து முதலியவற்றைத் தம் நூலின் பாயிரமாகத் தெய்வப்புலவர் கூறிப் போந்ததன் காரணம் யாது? இந் நான்குமட்டும் பாயிரமாகக் கொள்ளப்பட்டதன் நோக்கமென்னை? என்றகேள்விகள் அறிஞர்களால் நெடுக நிகழ்த்தப்பட்டுவருகின்றன.

இக்கேள்விகட்குப் பலர் பலவாறு விடை பகர்வர். ஜைனமதக் கொள்கைப்படி, நூன்முதலிற் கூறப்படும் வாழ்த்துக்களாகிய அருக சரணம் சித்தசரணம் சாதுசரணம் தன்மசரணம் என்ற நான்குமே வள்ளுவனார் கூறினாரென்பர், அவரை ஜைனரென்போர். இவ்வாறு வள்ளுவர்மதம் ஜைனம் என்போர் கொள்கையே முதற்றவறாகும்*. முற்குறித்தசரணங்கள் நான்கையும் அவர் கூறினரென்பது, "சமயக் கணக்கர் மதிவழி கூறாது - உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்" என்ற முனனோர் கருத்தோடு மாறுபட்டதுமாகும். அன்றியும், இச்சரணங்கள் நான்கில் வான்சிறப்பை விளக்கும் பகுதி காணப்படாமையும், அக்கொள்கையின் பொருத்தமின்மையைக் குறிக்கின்றது. இனி, புறப்பொருட்பாடான் பகுதியாகிய அறுமுறை வாழ்த்தே வள்ளுவனார் பாயிரம் என்பாரும் உளர். அறுமுறைகளாவன:—முனிவர், பார்ப்பார் ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகு என்பனவாம். இவற்றுள் முனிவரையும் மழையையும் தெய்வப்புலவர் பாயிரத்துட் கூறினும் கடவுட்கும் அறனுக்கும் அவ்வாறு முறையில் இடங்கள் காணப்பட்டில. அன்றியும், இவ்வாறுமுறை வாழ்த்தினையே வள்ளுவனார் கூறினவராயின், சிறப்பியல்களாகிய பார்ப்பாரையும் பசுவையும் ஒழிப்பினும், அரசர்க்கும் உலகுக்கும் வாழ்த்துக்கூறாததென்னை என்ற வினாவும் நிகழ்கின்றது. இன்னது இன்னதனுள் அடங்குமென்று கூறும விடை ஏற்றதன்றும். ஆத

---

*திருவள்ளுவனார், வைதீக கோட்பாடே உடையவரென்பது, யாம் பதிப்பித்துள்ள திருவள்ளுவர் குறட்பதிப்பின் முகவுரையில் நன்கு விளக்கப் பட்டுள்ளது. ஆண்டுக் காண்க.

யின் திருக்குறட் பாயிரம் அறுமுறைவாழ்த்தே யாகுமென்பதும், முடிந்த கொள்கையாகத் தோன்றவில்லை.

இனி, திருவள்ளுவரது பாயிர அமைதிக்கு மூலம் இன்னதென்பதை உரையாளர் - பரிமேலழகரேனும் பிறரேனும் ஓரிடத்தும் விளக்கினரில்லை. ஆயினும் வள்ளுவனார் ஏதோ ஒரு பிரமாணம் பற்றியே இங்ஙனம் கடவுள் வாழ்த்து முதலியவற்றைப் பாயிரமாகக் கூறினர் என்பது மட்டில நமக்குத் தெரியவருகின்றது. இந்நிலையில், யான் இவ்வாராய்ச்சியிற் புகுந்து முடிவு படுத்துவது இயலாத தாயினும், வள்ளுவர்க்கும் பிரமாணமாக விளக்கும் தொல்காப்பியத்திற் கண்ட சில குறிப்புக்கள் இவ்வாராய்ச்சியிற் புக என்னைத் தூண்டினவாதலின், என் கருத்துக்களையும் அறிஞர் ஆராய்ந்து ஏற்புடையவாயிற் கொள்ளக்கடவர்.

தொல்காப்பியப் புறத்திணை யியலிலே, பாடாண் பகுதிகளை ஆசிரியர் விளக்கி வருமிடத்து, அடியில் வரும் இரண்டு சூத்திரங்கள் கூறுகின்றார். அவை:—

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்று மென்ப"
"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்பனவாம். இச்சூத்திரங்களிலே அறுமுறை வாழ்த்துக்களும் வேறு நால்வகை வாழ்த்துக்களும் கூறப்படுதல் காணலாம். இவற்றுள், முற்சூத்திரத்துக் கண்ட "அமரர்கண் முடியும் அறுவகையானும்" என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், "பிறப்பினாலன்றிச் சிறப்பினால் தேவசாதியைச் சேர்ந்த முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகு என்ற ஆறன் வாழ்த்து" என்று உரைகூறித் திருக்குறளில் வரும் வானசிறப்பு நீத்தார் பெருமைச் செய்யுட்களை உதாரணமுங் காட்டினர். இவ்வுரையிலே, "அமரர்கண் முடியும்" என்ற விசேடணத்திற்குப், பிறவிச் சிறப்புடைய தேவர்களை விலக்கி, அத்தேவர்போலும் சிறப்பினுடைய அறுவரைப் பொருளாகக் குறிப்போர்த நச்சினார்க்கினியர் கூற்றி

ற்கு இன்னது பிரமாணமென்பது விளங்கிற்றில்லை. மேலும், சூத்திரப் போக்கிலேனும், தேவசாதி போன்ற முனிவர் முதலிய அறுவர் என்று விளக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்திலது. இதனால், பிரமாணங்களுடன் அறியப்படும் வரை, 'அமரர்கண் முடியும்' என்பதற்குக் கூறப்பட்ட இவ்வுரை ஐயம் விளைக்கக்கூடியதேயாம்.

இனி, "கொடிநிலை கந்தழி" என்ற சூத்திரத்திற்கு எழுதிய அவ்வுரையாளர் கூற்றும் ஆராயத்தக்கது. இச்சூத்திரம், முன்னது போலவன்றிப் பிறப்பில்லாத் தெய்வங்களின் ஒருசார் வாழ்த்துக்களைக் கூறுவதென்பதும், அவற்றுள் 'கொடிநிலை' என்பது கீழ்த்திசையில் நிலைபெற்றுத் தோன்றும் செங்கதிரையும், 'கந்தழி' என்பது ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளையும், வள்ளி யென்பது வெண்கதிரையும் குறிக்கும் என்பதும், இம்மூன்று தெய்வங்களும் ("கடவுள் வாழ்த்தொடு கண்ணியவரும்") முன் அறுமுறை வாழ்த்திற் கண்ட அமரரோடே கருதுயாற்றால் வாழ்த்தப்படும் என்பதும் அவர் கூறியவுரையாகும்.

இவ்வுரையின்படி, கொடிநிலை வள்ளி என்பவை முறையே சூரிய சந்திரரைக் குறிப்பனவாம். இங்ஙனம் பொருள் எழுதியதற்கு அவ்வுரைகாரர் கூறும் காரணங்கள் அடியில் வருவன:—

"பொய நீருலக மெடுத்த கொடிமிசை - மையறு மண்டிலம் வேட்டனர்" என்றவழிக் கீழ்த்திசைக்கண்ணே தோன்றும் மண்டிலம் என்றாற் போலக் கொடி நிலை என்பதூஉம் அப்பொருள் தந்ததோர் ஆகுபெயர்; இனி எப்புறமும் நீடு சென்று எறித்தலின், அந்நீடணிலைமை பற்றிக் கொடி நிலை என்பாருமுளர். "குவவுமென் முலையள் கொடிக் கூந்தலளே" என்றாற்போல வள்ளி யென்பதுங் கொடியை; எவனோ? பனிமின் தொடுத்த உடுத்தொடையைக் கொடியென்ப படுதலின்; அத்தொடையை இடைவிடாதுடைத்தாதலின் அதனை அப்பெயராற் கூறினார். "முத்துக் கொடி" எனவும் "மேகவள்ளி" எனவும் கூறுப, .....வெண்கதிர் அமிர்தம் தேவர்கு வழங்கலானும் வள்ளி என்பதூஉமாம் எனக் கண்டு கொள்க.

இவற்றால், கொடிநிலை என்பதற்குக் கீழ்த்திசையில் நிலைபெற்றுத், நீடணிலைமை யுடையது என்றிருபொருளும், வள்ளியென்பதற்கு, உடுத்தொடையை இடைவிடாதுடையது, அமிர்தம் வழங்குவது என்றிருபொருளும் அவ்வுரைகாரர் எழுதியமை உணர

லாம். ஆயின், இப்பொருள்கள் வழக்கும் பிரமாணமும் கொண்டன்றிக் கற்பித்து எழுதப்பட்டனவே என்பது, உரைகாரர் பலபடக் கூறுதலினின்று உணரப்படுகின்றது. இனி, ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் அரியபனரன எனனும் மூவர் கொடிகளுள் ஒன்றனோடு உவமித்துத் தன் அரசன் கொடியைப் புகழ்ந்தலைக் கொடிநிலை யெனவும், திருமால் வாணாசுரனது சோணகரத்தனை அழித்த வெற்றியைச் சிறப்பித்தலைக் கந்தழி எனவும், முருகக்கடவுள் பொருட்டுப் பெண்டிர் வெறியெடுத்தாடுதலை வள்ளி யெனவும் கூறப்பட்டுள்ளது. இப்பொருள்களோ நச்சினார்க்கினியர் கருத்துடன் முற்றும் வேறுகின்றன. ஆகவே, கொடிநிலை முதலியவற்றிற்குப் பல்வகைக் கருத்துக்கள் முற்காலத்தே வழங்கலாயின என்பது பெறப்படுகின்றது. ஆயினும், தொல்காப்பியனார் காலத்தே கொடிநிலை முதலியவற்றுக்குக் கூறப்பட்ட பொருள் வழக்கைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாது பாயிர அதிகாரங்கள் விளக்குவனவல்லனவோ என்பது எனது ஆராய்ச்சியாகும். அஃதாவது—திருவள்ளுவனார், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களைத் தம் நூன்முகமிற பாயிரமாக நிறுத்தினாரன்றோ? "ஆயிரத்து முந்நூற் றுமுப்பதருங்குறளும்—பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்" என்றார் சங்கப்புலவரொருவரும். இங்ஙனம் கூறியபாயிரத்துக்கு—

> "கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்ற சூத்திரமே மூலமாதல் வேண்டும் என்பதாம். இதனைச் சிறிது விரித்துக் கூறுவேன:

இச்சூத்திரத்திலுள்ள 'கடவுள் வாழ்த்தொடு...வரும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'முற்கூறிய அமரரோடு கருதுமாறு தோன்றும்' என்று உரைகூறியிருப்பினும், யாவர்க்கும் நேரே புலப்படும் பொருள், 'கொடிநிலை முதலிய மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும்' என்பதேயாம். இம்முறையினாராயுமிடத்து, உயர்பின் வழிவரும் ஒருவினையொடுச் சொல்லை ஆசிரியர் கடவுள் வாழ்த்து கருதுக கூறுதலின் அவ்வாழ்த்தே ஏனையவற்றினும் முதன்மைபெற்றது என்பது போதரும். "யானை தேர் பரி முதலியன, அரசனொடு வந்தன" எனின், அரசனை முதன்மையாகக்கொண்டு அவை வந்தன என்பதே கருத்தாமன்றோ. ஆகவே, கடவுள் வாழ்த்தை முதலாகக்கொண்டு கொடிநிலை முதலிய மூன்றும் வரும் என்பதே ஆசிரியர் கருத்தாமென்க.

இனிக் கொடிநிலை என்பது மேகத்தை உணர்த்தும். என்னை? கச்

சினார்க்கினியர், இத்திசைக்கண்ணே நிலைபெற்றது, நீடநிலையுடைய தென்று சூரியனுக்குக் கூறிய இருபொருளும் மேகத்துக்குங் கூறத் தக்கனவாதலால் எனக. மேகவாகனனாகிய இந்திரனது திசை கிழக் காதலின், அத்திசையே மேகத்துக்கும் உரியதென்பதும், அங்கு நின்றெழுந்தே கொண்டல்கள் உலகங்காப்பத்தீரப் பெய்வன என்ப தும் அறியத்தக்கவை; "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு காலத்திற் றோன்றிய கொண்மூப்போல" என்று கலித்தொகையி னும். அன்றியும், மேகத்துக்குக் கொண்டல் என்ற பெயர், அது குணதிசையினின்று எழுதலால் வந்ததேயாம். என்னை? குணக் கெழு காற்றும் கொண்டல் எனப்படுதலால் என்க. இனி, மேகப் நிரை மேக்கொண்ட மேகவள்ளி என வழங்குதல் முற்கூறிய நச்சி னார்க்கினியர் எழுத்தே குறித்தலால், அம்முறைபற்றிக் கொடிநிலை என்பதூஉமாம். அன்றி, மின்னற் கொடி என்பவாகலின், அக்கொடி க்கு நிலைக்களமாகியது மேகம் எனினும் அமையும்; இவற்றால் கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்கும் ஆற்றல் பெரிதுடைய தென்பது அறியப்படும்.

இனிக் கந்தழியாவது என்னை? கந்து என்பது பற்றுக்கோடாம்; "புலங்கந் தாக இரவலர் செலினே" எனக் காண்க. ஈண்டுக் கந்தா வது இவ்வுலகப்பற்றுக் கோடு அல்லது இவ்வுலக சம்பந்தமாதலின் அஃது அழிதல் கந்தழியாகும். ஆகவே, முற்றத் துறந்த முனிவர் நிலையை யுணர்த்தியவாறாகும்.

இறுதிநின்ற வள்ளி என்பது வள்ளன்மையுடையது என்னும் பொருளுடையதாய் அறத்தினைக் குறிக்கும்; என்னை? அவ்வறம் பெரும்பான்மை தியாகம் பற்றியே நிகழ்வதாதலின். "ஈதலறம்" என்றார் ஔவையாரும். நச்சினார்க்கினியர் சந்திரனுக்கு இப்பத த்தை இணக்குமிடத்து "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்க லான் வள்ளி என்பதூஉமாம்" என்று கூறுதலினின்று, வண்மை யடியாகவே இச்சொல் வழங்கியமை தெளியப்படும். ஆதலின் அஃது ஈண்டு அறத்தினை உணர்த்தியவாறு காண்க. இவற்றால் மேகம், துறவோர், அறம் என்ற மூன்றனையும் கடவுள்வாழ்த்தை முதலாகக் கொண்டு கூறும் வாழ்த்துக்களும் இப்பாடாண் பகுதி யாம் என்பதே "கொடிநிலை கந்தழி" என்ற சூத்திரப் பொருளா தல் கண்டுகொள்ளத்தக்கது.

ஆயின், முன்பு, "அமரர்கண் முடியும்" என்ற சூத்திரத்துக் கண்ட அறுமுறைவாழ்த்தில், வானும் முனிவரும் கூறப்பட்டன வாதலின் ஈண்டும் அவற்றைக் காட்டுதல் மிகையன்றோ எனின்:— "அமரர்கண் முடியும் அறுவகை" என்றே ஆசிரியர்கூற அதற்கு உரைகாரர் அவையின்னின்ன என்று எழுதியதன்றி, மூலத்தான் அப்

பகுப்பொன்றும் அறியப்பட்டதில்லையாம். அன்றியும், பிறப்பு வகையான தேவர்களன்றிச் சிறப்பு வகையால் தேவசாதியைச் சார்ந்தனவாகிய முனிவர், பார்ப்பார் ஆனிரை, மேகர், அரசர், உலகு என்ற அறுவரையே "அமரர்கண் முடியும் அறுவகை" என்றதனால் ஆசிரியர் கருதினரென்று நச்சினார்க்கினியர் எழுதுவர் 'அமரர்கண் முடியும்' என்ற அவ்வாசிரிய சனம் அங்ஙனமே பொருள் தந்து, பிறவித்தேவரை எவ்வெனம் விலக்கவல்லதென்பது தோற்றவில்லை. அதனால், செங்கதிர், வெண்கதிர் முதலிய தெய்வவகைகளும் அவ்வறுமுறையில் அடங்கியனவாக முன்பு கருதப்பட்டன என்பதே பொருத்தமுறையாம். இங்ஙனமே, சிலப்பதிகார-மங்கல வாழ்த்துப் பாடலில் கூறப்பட்ட அறுமுறை வாழ்த்தில திங்கள், செங்கதிர், மாமழை, புகார் (உலகு) உயர்ந்தோர் (முனிவர்), சோழன் (அரசு) இனையோர் வாழ்த்தப்பட்டிருத்தலும் அறியத்தக்கது.* இவ்வாழ்த்துக்களில் தெய்வவகையும் மானிடவகையும் கலந்து வாழ்த்தப்படுதலும், ஆவும் பார்ப்பாரும் விலக்கப்படுதலும் காணலாம். இளங்கோவடிகள் தம் ஜைனமதச் சார்புக்கேற்ப ஆவையும் பார்ப்பாரையும் விலக்கி அவ்விடங்கட்கு மழையையும் முனிவரையும் கொண்டு அறுமுறை கூறினர்போலும். இங்ஙனமாயின், அறுமுறை வாழ்த்தென்பது, திங்கள் செங்கதிர் அந்தணர் ஆனிரை உலகு அரசு என்பனவாதல் வேண்டும்.

இவற்றால், தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், "கொடிநிலை கந்தழி வள்ளி ......... கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்ற பழைய பிரமாணத்தைப் பற்றியே தம் பொதுமறையில் கடவுள் வாழ்த்து முதலிய நான்கதிகாரங்களைக் கூறினவராதல் வேண்டுமென்று தோற்றுகின்றது. கடவுள் வாழ்த்து என்பது போல வாழ்த்துப் பெயரால் கூறாது, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்று அதிகாரப் பெயர் கொடுக்கப்பட்டிருப்பினும், அவற்றின் பெருமை கூறுதலும் வாழ்த்தேயாமென்க. தொல்காப்பியச் சூத்திரத்தில் "கொடிநிலை, கந்தழி, வள்ளி யென்றும் கடவுள் வாழ்த்தொடு வரூஉம்" என எல்லாவற்றுக்கும் வாழ்த்து என்பது சேர்க்கப்பட்டமையும் காண்க. அறுமுறை வாழ்த்துக்கள் எம்முறையிற் பழைய காலத்து வழங்கியவேனும், அவற்றில் மதச்சார்பு வெளிப்படுத்தலின்றி, தம் பொதுமறையில் அத்தகைய வாழ்த்துக்களைக் கூறாது, எல்லார்க்கும் ஒப்பமைந்த கொடிநிலை முதலாய வாழ்த்துக்களையே வள்ளுவனார் கூறுவாராயினர் என்க.

இவற்றால் திருக்குறட்பாயிரம், தொல்காப்பியச் சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு கூறப்பட்டதென்பது அறிந்துகொள்க. அறிஞர் யான் கூறியவற்றை ஆராய்ந்து ஏற்புடையவாயிற் கொள்ளக்கடவர்.

மு. இராகவையங்கார்.

---

* அடியார்க்கு நல்லார், இம்மங்கல வாழ்த்துக்களை அறுமுறையைச் சேர்ந்தனவாகக் கூறாது வேறொன்றாகக் கொண்டு தெரிகின்றது.

# சிவாநுபூதிச் சித்தாந்தசங்கம்.

இத்தலைப் பெயரால் திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடியில் 1912ஆம் வருஷம் எப்பிரல் மீ 28உயில் ஒரு சங்கம் கூடிற்று. சங்கத்தின் நோக்கங்களாவன:—

1. நூலாராய்ச்சியுடன் சிவபெருமான் திருவருளைப் பெறுதற்கான சாதனங்களை இயன்றவாறு பழகிவருதல்.

2. நீதிநெறியான நல்லொழுக்கங்களைத் தவறாது அனுட்டித்தல்.

3. சைவசமய சம்பந்தமாகச் சிறு புத்தகங்கள், துண்டுப் பத்திரிகைகள் வெளிப்படுத்தல்.

இவ்வித தீர்மானங்களுடன் தூத்துக்குடியிலும் நாகைபட்டின முதலிய அயலூர்களிலுமுள்ள சிலரை அங்கத்தினராகச் சேர்த்து நடைபெற்றுவருகின்றது. 1913ஆம் வருஷம் ஜனவரி மீ 13உயில் சங்கம் கூடிற்று. அக்கூட்டத்தில்மாதம் ஒரு முறை குறையாது பிரசங்கக் கூட்டம் கூட்டவேண்டுமெனவும் அதற்காக ஒரு இடம் ஸ்ரீமான் - பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் தீர்மானித்துச் சங்கத்தாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

அவ்வாறே தூத்துக்குடிக்கு மேலவூர் வடக்கு ரதவீதியிலிருக்கும் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயத்தில் குருபூஜா தினங்களில் குருபூஜை முடிந்தபின்பும் மற்ற தினங்களில் பகல் 11 மணிமுதல் 2 மணி வரையும் இரவு 7 மணி முதல் 10 மணி வரையும் சங்கத்தின் நடபடிக்கைகளை நடத்திக் கொள்வதற்காக ஷை மடாலய அறுதார் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியபிள்ளையவர்களிடம் தஸ்தாவேஜு மூலமாய் ஒப்பந்தஞ் செய்து ஸ்ரீ பொ. மு. அவர்கள் தெரிவித்தார்கள்.

ஜனவரி மீ 30உயில் ஷை மடாலயத்தில் சங்கத்தின் முதலாவது கூட்டமும் ஸ்ரீதாயுமான சுவாமிகள் குரு பூஜையும் நடைபெற்றன. அக்கூட்டத்தில் திருக் கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனசைவப் பிரசாரகர் ஸ்ரீமான்-பொ. மு முத்தையபிள்ளை அவர்களால் "தாயுமானவரும் சைவ சித்தாந்தமும்" என்ற விஷயம் உபந்யசிக்கப் பெற்றது.

உபந்யசித்ததில் தாயுமானசுவாமிகள் சரித்திரமும், அவருடைய நோக்கம் சைவசித்தாந்தமே யாமென்பதும், சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியார் 8ம் சூத்திரத்திலுள்ள "அறியாமை யறிவகற்றி என்றற் றொடக்கத்துத் திருப்பாசுரத்தின் முதலிரண்டடியையே சுவாமிகளும் சிவபோகசார நூலுடையார் முதலிய பெரியோர்களும் புகழ்ந்து கூறுகிற

பவும் அச்செய்யுள் முழுமையும் "மௌனகுரு" வென்னும் பதிகத்தில் ஐந்து வகை யாகின்றன" என்றற் றொடக்கத்துச் செய்யுளில் முற்பாதியில் அமைந் திருப்பதாகவும கேட்டோர் யாவரும் மனங் கசிந்துருகத் தெள்ளியநடையில் விரித்துரைத்தார்கள்.

திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். உபந்யாசம் முடிந்த பின்னர் சங்கதின் உப அக்கிராசனாதிபதியும் கவர்ண்மெண்ட் தந்தி ஆபீஸ் சிக்னெல்லரு மாகிய ஸ்ரீமான் - ஆட்கொண்டார்பிள்ளை அவர்கள் உபந்யாசத்தைப் பற்றிப் பாராட்டிப் பேசியும் "சிவமயம், திருச்சிற்றம்பலம், சிவாநுபூதிச சித்தாந்த சங்கம்" என முறையே அழைப்புப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட சொற்கள் ஒன்றுக்கொன்று சம்பந்த முற்று சங்கத்தின் அபிவிர்த்திக்கு அறிகுறியாயிருக்கின்றன என்று பிரசங்கித்தும் உபநயாசகருக்கும் சபையாருக்கும வந்தனங் கூறினார்கள்.

இடையிடையே ஸ்ரீமாந் - சேது இராமலிங்கம் பிள்ளை அவர்களால்கேட்போர் மனங்கசிந்துருகும் படியான றெக்கார்டு (Records)களைக்கொண்டு கிராமபோன் வாத்தியம நடத்தப்பட்டது.

இரவு 9 மணிக்கு சந்தன தாம்பூலங்கள் சபையாருக்கு வினியோகிக் கப்பெற்றன. சங்கம பூர்த்தியாயிற்று.

சங்கத்தின் பரிபாலன கர்த்தர் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்.

நிரந்தர அக்கிராசனாதிபதிகள் ஷை ஆதீன சைவப்பிரசாரகர் ஸ்ரீமான் பொ. மு. முத்தையபிள்ளை அவர்கள்.

உப அக்கிராசனாதிபதி - கவர்ண்மெண்ட் தந்தி ஆபீஸ் சிக்னெல்லர் ஸ்ரீமாந்-ஆட்கொண்டார்பிள்ளை அவர்கள்.

காரியதரிசி - ஷை தந்தி ஆபீஸ் சிக்னெல்லர் ஸ்ரீமாந் - தி. திருஞான சம்பந்தம்பிள்ளை அவர்கள்.

பிறரூராரும் அங்கத்தினராகச் சேரலாம். வருடம் ஒன்றுக்கு ரூபா ஒன்று சந்தாக்கொடுக்கவேண்டும். மற்றைவிவரங்கள் சங்கத்தினகாரியதரிசி அவர்களுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

க. சூரியநாராயணபிள்ளை.
சங்கத்தின் அங்கத்தினர்.

# பிரசங்கங்கள்.

பள்ளத்தூர் சத்தியஞான சன்மார்க்க சபையில் 22-2-13 மாலை 4 மணிக்குச் சபைகூடியது. சபையோர் விருப்பத்தின்படி மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீ-மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். தேவாராதி அருட்பாக்கள் பண்ணுடன் ஓதப்பெற்றன. சபாநாயக கவிராயரவர்கள் முன்னுரை கூறி யமர்ந்தபின் யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீ நாகலிங்கம்பிள்ளை யவர்கள் "சைவசமயம்" என்பதைப்பற்றி உபந்யசிக்கத் தொடக்கி உலகம் காரியமெனவும், இறைவன் காரணன் எனவும் இறைவனைவழிபட்டுய்ய யாதானுமோர்சமையம் அவசியம் வேண்டப் படுமெனவும், எல்லாச் சமையங்களையும் தன்னுளடக்கித் தானே மேற்பட்டு நிற்பது நமது சைவசமையமே யெனவும், ஆதலின் யாமனைவரும் சைவசமையப் பற்று அதிகமுற்றவர்களாகி சிவாநுக்கிரக மெய்த வேண்டு மெனவும், வடமொழி தென்மொழி மேற்கோள்களுடன் சொல்லி முடித்தார்கள்.

பின்னர் தேவிகோட்டை ஸ்ரீமத்-அரு. அரு. சோம. அருணாசலஞ் செட்டியாரவர்கள் 'கல்வி' யைப் பற்றி யுபந்யசிக்கத் தொடங்கி கல்வியின் பெருமை, கல்லாமையின் சிறுமை, கல்வியின் பயன், கற்கவேண்டிய நூல்கள், கற்றவர்களால் உலகமடையும் ஆனந்தம் இவைகளைப் பற்றித் திருவள்ளுவர் குறள் முதலிய பல மேற்கோள்காட்டிச் சுருக்கசசொல்லல் விளங்கவைத்தலென்னும் அழகு பெறப் பேசினார்கள்.

பின்னர் மதுரை வித்துவான் சுந்தரேசஐயரவர்கள் "பக்தி" என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யசிக்கத் தொடங்கி அன்பு, கருணை, பக்தி இவற்றின் தன்மைகள், அவற்றில் பக்தி கடவுளிடமும் அடியாரிடத்தும் செல்லுவதான மனப் பற்று; இம்மனப் பற்றை இடமறிந்து செலுத்த வேண்டும். பரமேசுவரனிடத்தே செலுத்தும் பக்தி தான் ஒப்புயர்வில்லாத மெய்ப்பயன் தருவது. இங்ஙனம் பக்தி செலுத்திப் பேறுபெற்ற நாயன்மார்கள் சரித்திரப் பெருமை முதலியவாகப் பற்பல சிறந்த நூலாதாரங்களுடன் சபையோர் மகிழப் பேசினார்கள்.

பின்னர் பள்ளத்தூர் கலாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீ சிதம்பர புன்னைவன நாத முதலியாரவர்கள் "பொறுமை" யைப் பற்றிப் பிரசங்கித்தார்கள். பொறுக்க வேண்டிய அவசியம், அதனால் வரும் நன்மை, பொறுக்க வேண்டிய இடம், பொறுமையால் நன்மை யுற்றவர் சரிதம், பொறாமையின் கேடு இவைகள் நன்கு விளக்கப்பட்டன.

பின்னர் சொக்கலிங்கம் புதூர் வித்தியாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீ-ரே. ராமமூர்த்திஐயரவர்கள் "அறம்" என்பதைப் பற்றிப் பிரசங்கிக்கத் தொடங்கி இரக்கத்தினால் செய்யப்படல் வேண்டும்; யாதொரு கைம்மாறுவது புகழாவது பெற விரும்பிச செய்யாமலிருக்க வேண்டும், இடமறிந்து செய்ய வேண்டும், செய்யப் படும் இடத்திற கேற்பவே பலனுண்டு. மனத்தாலாம் அறம் நற்சிந்தை, வாக்கினால் ஆம் அறம் வாய்மை, காயத்தாலாம் அறம் நற்செயல்; நற்செயல்களெல்லாவற்றினும் தலைமையான அறம் ஈகையே என்பனவாகப் பலபட விரித்துச் சிறந்த மேற்கோள்களுடன் நன்கு பேசினார்கள்.

பின்பு மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ- மு. கதிரேசச் செட்டியாரவர்கள் "ஜீவகாருண்யம்" என்பதைப்பற்றி உபந்யசிக்கத் தொடங்கி, அருள் என்பது பிற உயிர்களிடத்துச் செல்லும் கருணையே. இல்லறத்தாரிடம் தொடர்பு பற்றி யுளதாவதாகிய அன்பு போல் துறவறத்தாரிடம் எல்லாவுயிர்களிடத்தும் தோன்றுவதாகும். அன்பின முதிர்ச்சியே அருளாதலின, "அருளென்னு மன்பீன் குழவி" என்றார் பொய்யில் புலவர். எல்லா வுயிர்களிடத்தும் கருணை கொள்ள வேண்டும்; இங்ஙனம் கொள்வதால் தான் இருமைப் பயனும் பெறலாம். பொருட் செல்வத்தினும் அருட்செல்வமே சிறந்தது. அருளாகிய மனநெகிழ்ச்சி பெற்றாலன்றி மோக்ஷம் பெறவியலாது. அருளுடையவர்கள் எல்லாவுயிரையும் தம்முயிர் போலவே கருதவேண்டும். ஜீவஹிம்சை 'சிறிதுஞ் செய்யலாகாது, கல்வியின் பயனுமிதுவேயாகும்—எனபனவாதியாகத் திருவள்ளுவர், மணிமேகலை பெரிய புராணம் முதலிய' சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்காட்டி மிக இனிமையாகப் பேசினார்கள்.

பின்னர் சபாநாயகரவர்கள் எல்லா உபந்யாசகர்களினுமுள்ள சாரங்களை யெடுத்து விரிப்பன விரித்துக் கூறிச் சபையோரை மகிழ்வித்தார்கள். அருட்பா வோதப்பெறறது. பின்னர் ஸ்ரீ. பழ. அ. பழ. பழநியப்பசெட்டியாரவர்கள் சபாநாயகரவர்கட்கும் உபந்யாசகர்கட்கும் சபையோர்கட்கும் வந்தனங் கூறினார்கள். இரவு 10 மணிக்குச் சபை நிறைவேறியது.

## தேவிகோட்டை வைசிய சிவாநந்த சபைப் பிரசங்கம்.

25. 2. 13ல், மாலை 7 மணிக்குச் சபை கூடியது. தனவைசிய சிகாமணிகளும் வித்துவான்களும் வக்கீல்களும் பிறருமாக சுமார் 300 பேர்வரை கூடினார்கள் சபையார் விருப்பப்படி மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீ. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து முன்னுரை கூறியபின், தூத்துக்குடியிலிருந்து அங்கு வந்திருந்த ஐகோர்ட்டு வக்கீலும், செந்தமிழுணர்ச்சி நன்கு வாய்ந்து வருமான ஸ்ரீ - சோமசுந்தர பாரதியவர்கள் பீ. ஏ. பீ. எல். "தமிழர் பழமை" என்னும் விஷயத்தை உபந்யசிக்கத் தொடங்கி கலித் தொகை புறநானூறு பத்துப்பாட்டு தொல்காப்பியம் இறையனாரகப் பொருள் முதலிய பண்டைத் தமிழ் நூல்களையும் ஆங்கிலத்திற் சிறந்த அறிவாளிகள் எழுதிய பழைய நூல்களையும் ஆதாரம் காட்டித் தமது யுக்தி வலிமையைக்கலந்து தமது பண்டைகாலத் தமிழ்க் மக்களின் இயற்கையறிவு நாகரிகம் ஒழுக்கம் முதலியவற்றைச் சபையார் மிக்க மகிழ்ச்சி கொள்ளும்படி இனிய மொழியுடன் மிக அழகாகப் பேசினார்கள் தேவிகோட்டை வக்கீல் ஸ்ரீ-நாராயணையங் காரவர்கள் ஷை உபந்யாசத்தை வியந்து பாராட்டிப் பேசினார்கள் மதுரை ஸ்ரீ - மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள்,

குடவுணர்வா ராதியர்சொல் தமிழர்நிலை யதுவிதண்டாக் கோளென் றுய்ந்து
தடமலியுந் தேவைநகர் வைசியசி வாநந்த சபையின் மேவிக்
கடலமுதிற் செம்பாக வலமுறக்கும் பாவின்பங் கதுவச் சொற்றூன்
வடமொழியாந் திலகதமிழ்தேர் மால்சோம சுந்தரமன் வாழ்க மன்னோ.

என்ற கவியால் ஷைஉபந்யாசத்தைப் பாராட்டிப் பொருள் விரித்தார்கள. பின்னர் சபாநாயகச்செட்டியாரவர்கள் பாரதியவர்களின் நூலாராய்ச்சி மதிநுணுக்கம் சொல்வன்மை முதலியவற்றை

வியர்துரைத்து அவர்கள் பிரசங்கித்த விஷயத்தை விளக்கிக் கூறினார்கள். யாவருக்கும் சந்தன தாம்பூலாதிகள் கொடுத்துபசாரனை நடந்தது. இரவு 10 மணிக்கு நிறைவேறியது.

26. 2 13. ஆகிய மறுநாள் மாலை 4 - 30 க்கு தேவிகோட்டை வைசிய சிவாநந்த சபை கூடியது. முதல் நாள் போலவே நகரத்தார்களும் பிறரும அன்புடனவந்து கூடினார்கள். சபையாா விருப்பின்படி மதுரை வித்துவான் ஸ்ரீ-சுந்தரேசஐயரவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரை கூறியதுடன் ஜீவகாருண்யம் ஆறறிவுடைய மனிதர்கட்கே யுரியது பிறர் துயர் நீக்குவது. அன்பினறன்மை, பிரமசரியம், தனனைமட்டும் காப்பது, இல்லறம - தனனுடன் மனைவி மக்களாதிய பலரையும காக்க முற்படுவது. துறவறம்- எல்லாவுயிர்களிடத்தும இரக்கம் கொள்வது. பசுத்துவ அருள் கண்டமாவது. பதிபருள் அகண்டமாக வியாபித்துள்ளது. எல்லா வுயிர்களையும் இறைவன் வசிப்பிடமாகக் கொண்டு பற்றுவைப்பதே சிறந்த கருணையாகும். மனவாக்குக காயங்களால் எப்பொழுதும் பிறர் துயர் நீக்கி நனமைசெய்தலே சிறந்த கருணையாவது என்று பல உதாரணஙகளுடன் விளக்கக்கூறினார்கள்.

பினனர் மதுரை - ஸ்ரீ - மு. ரா, கந்தசாமிக் கவிராயரவர்கள் "நட்பு" என்பதைப் பற்றி நட்பினறன்மை, நட்புக கொள்ளச் செய்யும்ஆராய்சசி முறை, கொண்டபின செலுத்த வேண்டிய முறை நட்பாலடையும் பயன்முதலிய வாகப் பலவகைப் படுத்தி யாவரும் மகிழ்வுறுமபடி உபந்நியசித்தனர்.

பின்னா மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ - மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "சிவாநந்தம்" என்னும் விஷயததைப் பற்றிப் பிரசங்கிக்கத் தொடங்கி, ஆனந்தம் பலவகையால் வரும். அவற்றுட் சிறந்தது யாதெனில், எக்காலத்தும் குறைதலின்றி மாறுத அநுபவிக்கும் சிவாநந்தமேயாகும். இது சிவம் ஆநந்தம் என இரண்டு சொற்களாலாய தொடர்மொழி. சிவத்தை யறிந்து அடைந்து உயிர் கொள்ளும் இன்பமே சிவாநந்த மெனப்படும். என்றெடுத்துச் சிவத்தின்றன்மை, அதனை யடையும் வழி, உயிர்களினறன்மை, அடைந்தபின் அமைந்த நிலை முதலியனவாகச் சிறந்த பற்பல மேற்கோள்களுடன் சபையவர் மகிழ இனிது பேசினார்கள்.

பின்னர் ஸ்ரீ. தி. அ. சு. அ ராமநாதன் செட்டியாரவர்கள் 'கல்வி' யைப்பற்றி அருமையான ஒருவியாசம் எழுதிவாசித்தார்கள்.

பின்னர் ஸ்ரீ, சோ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் 'ஈகை' என்பதைப்பற்றிச் சிறந்தமேற்கோள்களுடன் அதன்தன்மை முறை பயன் முதலியவைகளை விரித்து உபந்யசித்தனர். சபாநாயகரவர்கள் எல்லாப் பிரசங்கங்களையும் எடுத்துக் கூறிச் சபையைப் பரவசப்படுத்தினார்கள். சபையின்காரியதரிசியவர்கள், சபாநாயகர் உபந்யாசகர்கள் சபையார்கள் யாவருக்கும் நன்றிகூறிச் சந்தன தாம்பூலம் கொடுத்துபசரித்தார்கள். இரவு 10 மணிக்குச் சபை நிறைவேறியது.

சண்முகநாதபுரம், தனவைசிய சிகாமணிகள் விருப்பின்படி 28-2-18-ல் மாலை 4 மணிக்கு ஒருசபைகூடியது. சுமார் 250 பேர் வந்திருந்தனர். சபையார் விருப்பின்படி மதுரை. ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் சபாநாயகராக அமர்ந்து முன்னுரைகூறிய பின்னர்,

யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீ. நாகலிங்கம் பிள்ளையவர்கள் "மனிதப்பிறப்பினருமை" என்பதைப்பற்றி மற்றையபிறப்புக்களின் தாழ்வையும், மனிதப்பிறப்பின் உயர்வையும்; இவ்வுயர்பதவியில் பிறந்தவர்கள்செய்யவேண்டியகடைமைகளையும், செய்யாவிடிலடையும் தீமைகளையும், நரகமோக்ஷங்களின் கதிநிலைமைகளையும் விரித்து உபந்யசித்தனர்.

பின்னர் தேவிகோட்டை ஸ்ரீ. அரு. அரு. சோம, அருணாசலஞ்செட்டியாரவர்கள் "கடவுள் வழிபாடு" என்னும் விஷயத்தைப்பற்றிக்கடவுள் நிச்சயத்தையும், வழிபடுமுறையையும், அதன்பயனையும், வழிபடாவிடில் வரும் இழுக்கையும், வழிபட்டுய்ந்தோர் பேற்றையும் பலபடவிரித்துத் தமிழ்வேதப் பாடல்களை இன்னிசையோடு மேற்கோள் காட்டி மதுரமாகப் பிரசங்கித்தார்கள். இவர்கள்பாலரூபப் பொலிவும் முகமலர்ச்சியும் மதுரமொழியும் பக்தியும் கண்டு வியந்து அக்கிராசனம் வகித்த கவிராயரவர்கள் அப்போது ஒருகவி கூறினார்கள். அதுவருமாறு:—

கருவிற் றிருவுடையான் கல்வி யுடையான்
பெருமையரு ளுசலமாம் பேரான்—ஒருமுதலாம்
வளளற் கியற்றும வழிபாடு சொற்றான்யாம்
உள்ளத்த ளுஎள வுவந்து. என்பதே.

பின்னர், மதுரை வித்துவான் ஸ்ரீ. சுந்தரேச ஐயரவர்கள் "புலான் மறுத்தல்," என்ற விஷயத்தைத் தொடங்கி புலாலுணவால் வரும் தீமைகளையும் புலாலுண்ணாமையால் வரும் நன்மைகளையும் சாஸ்திர யுக்தமாகக்காட்டி நன்றாக உபந்யசித்தார்கள்.

பின்னர் சென்னை வித்துவான். ஸ்ரீ வா. மகாதேவமுதலியா ரவர்கள் "ஈகை" என்பதைப்பற்றி "ஈதலறம்" என்பதுதலின், அற ங்களிலெல்லாம் சிறந்தது ஈகையேயாகும். பிறர்க்கீயாமல் வைத்தி ருப்பவன் பொருள் பயனற்றதாகக் கெட்டேபோகும். கொடுத்த வனே யுயர்வடைவான். கொடாதவன் றாழ்வடைவான். கொடை யின்வகை பலதிறப்படும். அவற்றுள் கைம்மாறுகருதாது கொடுத் தல் தலை மேலானது. கொடுத்துயர்ந்தார் வள்ளல்களாதியர் என் பன வாதியாகப் பல கவிகளையும் சரிதங்களையும் கூறிப்பிரசங்கித் தார்கள்.

பின்னர். ஸ்ரீ-சோ. வேலுச்சாமிக்கவிராயரவர்கள் "பொறாமை' யைப்பற்றிப் பேசத்தொடங்கி பொறாமையின் தன்மை அதனால டையும் கேடு அதனை விலக்க வேண்டிய வுபாயம் விலக்கியதாலடை யும் நலம் முதலியவற்றை விரித்து நன்றாக வுபந்யசித்தார்கள்.

பின்னர், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ. மு. கதிரேசச்செட்டி யாரவர்கள் "சிந்தனை" என்பதையே உபந்யாச விஷயமாக எடுத்து மனத்தின் செயலே சிந்தனையாவது. அது சங்கற்ப ரூபமாவது. மனமோ குரங்கின் றன்மையுடையது. சகல புண்ணிய பாவங்கட் கும் பிறப்பிடமாவது இந்த மனமே. எந்த நன்மை தீமைகளும் இதன் மூலமே நிகழும். மனவொற்றுமையின்றிச் செய்யும் புறக் கைங்கர்யங்கள் பயனுடையனவாகா. குரங்கின் இயற்கைத் தன் மை அடங்காமல் சேஷ்டை செய்வதே; ஆனால் அக்குரங்கை ஒரு வன் பிடித்து ஆட்டி வைப்பானாகில் அவன் குறிப்பின்படி யெல்லாம் ஆடும். அப்படி ஆடுவதால் அதற்கும் இனிய ஆகாராதிபோஷணை

கிடைப்பதுடன் குரங்காட்டிக்கும் பொருள் கிடைக்கும். அது போலமனம் துஷ்ட சுபாவத்தை யுடையதாயினும் அறிவானது குரங்காட்டிபோல அதை (மனத்தை) வசப்படுத்திவிட்டால் மனம் அறிவுக்கு அடங்கி அறிவு கற்பித்தபடியே நடக்கும். அப்போது மனமும அறிவும் பயனடையும். மனத்தை ஒருவன் தன வசப் படுத்திக் கொண்டால் பின்னர் அவனுக்கு எல்லாப்பயனும் எளிதில அடையதக்கனவாகவே சித்திக்கும். மனத்தை வசப்படுத்தாமல் மனவசப்பட்டுள்ள அறிவு குரங்கின் கையில அகப்பட்ட பூமாலை போல் சின்னாபின்னமாய்க் கெடும். மனத்தின் நிலைப்பாகிய சிந்தனை யானது எதனிடத்துச் செல்கின்றதோ அதன் மயமாம். அந் நிலையில் பிறிதொன்றும் தொன்றாது. இதனால தான ஞானிகள் கண்ணுக்கு உலகம் தோன்றுவதில்லை. கடவுளிடத்தே எப்பொழு தும சிந்தனையைச் செலுத்துபவர்களாதலின அநத மெய்யறிவாளர் க்கு எதிரில தோன்றும் எல்லாப்பொருளும் கடவுள் வடிவாகவே தோன்றும். ஆதலால் மனத்தை அடக்கியாளவதே அறிவின் கடமையாகும். அப்படிச் செய்தாலன்றி இருமைப் பயனுள் ஒன் றுவது கிட்டாது. மனம் அடங்கினுல் மோக்ஷ செல்வமும எளிதிற் பெறலாம் என்பன முதலியவாகப் பற்பல சிறந்த நூலுரைகளை மேற்கோள் காட்டி அருமையாகப் பிரசங்கித்தார்கள்.

பின்னர், கல்லுப்பட்டி வடமொழிப்போதகாசிரியர் ஸ்ரீ- த. நாராயணசாஸ்திரிகள "சற்சங்கம்" என்ற விஷயத்தைப்பற்றி அநேக வடமொழி மேற்கோள்களுடன் நன்கு உபந்யசித்தார்கள்.

முடிவில் அக்கிராசனரவர்கள் எழுந்து ஒவ்வொரு உபந்யாசங் களிலுமுள்ள சாரங்களையும் தனிததனி பாராட்டிப் பேசிச் சபை யோரை மகிழ்வித்து ஒரு வாழ்த்துக்கவியுங் கூறிப் பொருளளித் தார்கள். சபையோர்கள பெருமகிழ்வெய்தி அக்கிராசனாதிபதிய வர்கட்கும் ஏனைய பிரசங்க வித்துவான்கட்கும் பூமாலை சூட்டி வந் தனங்கூறினர்கள். இரவு 10-மணிக்குச் சபைநிறைவேறியது.

இங்ஙனம் உபந்யாசம் நடந்ததன் பயனாக இந்தச் சன்முக நாதபுரம தனவைசியசிகாமணிகள் ஒரு தமிழ்க் கலாசாலையும் சபை யும ஏற்படுத்துதற்கு மிகவும் விருப்பமெய்தி மூலதனம் தொகுத்து வருகின்றார்கள். 10000 ரூபாவரை கையொப்பமா யிருப்பதாக அறிகிறோம், இறைவனருளக.

தமிழ்ப்பிமானி.

# சமாசாரக்கொத்து.

மதுரையின் காலநிலை—பகல்முழுதும் வெயிலின் கொடுமையும் இரவில் கொசுக்கடி வேதனையும் மிகுதியாயிருக்கின்றன. முடக்குச் சுரம் என்று வழங்கப்பெறும் ஒருவித சுரநோய்வந்து பலஜனங்களை வருத்துகின்றது.

*　　*　　*

நம்மீது வந்த அவதூறுக்கேஸ்—நமது வித்தியாபாநு தொகுதி 4 பகுதி 5ல் இலக்கண வரம்பை விளக்கும் நூலாராய்ச்சியையே விஷயமாகக்கொண்டு வெளிவந்த கீழைச்சிவப்பட்டித் தலபுராணப் பிழைகள் என்னும் தலைப்பெயருள்ள வியாசத்தைப்பற்றி ஷை புராணத்தைப்பாடிய வீரகவியவர்கள் நம்மீதும் அதனை யெழுதிய மகிபாலன்பட்டிவித்துவான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் மீதும் தேவகோட்டை முதல்வகுப்பு மேஜிஸ்திரேட்டாரவர்கள் முன்பு கொண்டுவந்த கிரிமினல் கேஸானது வாதியின் வீப் கடந்து விராண் விசாரணையாகிக்கொண்டு வருகையில் 25-2-13 ல் வாதி பிரதிவாதிகளால் சமாதான முடிவுசெய்துகொள்ளப்பட்டது. ஷை கேஸ் நடபடிக்கைகட்டு நகல் சமீபத்தில்தான் நமக்குக் கிடைத்தது. அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அடுத்த பாநுவில் வெளியிடப்பெறும்.

*　　*　　*

ரப்பர் எண்ணெய்:— ரப்பர் விதையிலிருந்து ஒருவிதமான எண்ணெய் ஜப்பானியர்களால் எடுக்கப்படுகிறதாம். இதை அவர்கள் செய்யும் காகிதக்குடைக்குமேல் பூச்சாக உபயோகப்படுத்துகிறார்கள். இந்த எண்ணெய்ப்பூசையால் காகிதத்தில் தண்ணீர் தங்காமல் கீழே வழிந்துவிடுகின்றது.

பத்திராசிரியர்.

## ADVERTISEMENT.

### பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } ஸ்ரீ காசி { பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

**உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.**

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது, கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1க்கு அணா 10 முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

**வெண்பட்டு வேஷ்டிகள்.**

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி வன்னக்கம்பி ருத்திராக்ஷ கம்பி ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபா | 4-8 | முதல் | 7 | வரை |
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 1-க்கு | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 12 | ,, |
| 7 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 14 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, | 18 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, | 20 | ,, |
| 10 | ,, | 4 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, | 22 | ,, |

**பனி! பனி!! பனி!!!**

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், மாமாடம், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 முழ நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—8—0. ஷை சிறிது 1-க்கு ரூபா 4-8-0. மேகவர்ணப் போர்வை 1-க்கு ரூபா 6-8-0 தபால் செலவு பிரத்தியேகம்.

**காசி வயிரவர் கயிறு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 8 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 0 | 0 |
| 4-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

**குழந்தைகள்.**

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் கைக்கு பலபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள். விலாசம் மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு, காசி.

MANAGER, Silk Petamber Co., Dharanagar Street, Benares City